ந.க.அ1/583/2020 நாள் : 26-06-2020

# வட்டாட்சியர் அலுவலகம், திருவாடானை

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 27-7-2020 பிற்பகல் 05.45 மணிவரை திருவாடானை வட்டாட்சியர் அலுலகத்தில் கிடைக்குமாறு வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | நேரடி நியமன பதவி விபரம் | ஊதியம் ஏற்ற முறை | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கிராம உதவியாளர் | ரூ. 11100-35100 நிலை-6 (சிறப்பு நிலை ஊதிய விகிதம்) Rs. 11100 - 35100 Level - 6 (Special Time Scale of Pay) | 16 |

2. நிபந்தனைகள் :

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசு பணியாளர்கள் தேர்வுக்கு பின்பற்றப்படும் வகுப்பு வாரி சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| வ. எண் | வருவாய் கிராமத்தின் பெயர் | பணியிட எண்ணிக்கை | இனச்சுழற்சி எண் மற்றும் விபரம் |
|---|---|---|---|
| 1 | ஆட்டூர் | 1 | 53. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது) முன்னுரிமையுடையவர் |
| 2 | சித்தாமங்கலம் | 1 | 54. பிற்படுத்தப்பட்டோர் (பொது) முன்னுரிமையற்றவர் |
| 3 | ஒடவயல் | 1 | 55. பொது (பொது) முன்னுரிமையற்றவர் |
| 4 | மச்சூர் | 1 | 56. ஆதி திராவிடர் (பொது) முன்னுரிமையற்றவர் |
| 5 | கிளியூர் | 1 | 57. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) முன்னுரிமையற்றவர் |
| 6 | சிறுகம்பையூர் | 1 | 58. பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) முன்னுரிமையற்றவர் |
| 7 | பட்டமங்கலம் | 1 | 59. பொது (பார்வையற்றோர்) பொது முன்னுரிமையற்றவர் |
| 8 | துத்தாகுடி | 1 | 60. பிற்படுத்தப்பட்டோர் (பொது) முன்னுரிமையுடையவர் |
| 9 | இளையாத்தான்வயல் | 1 | 61. பொது (பெண்கள்) முன்னுரிமையற்றவர் |
| 10 | அரசூர் | 1 | 62. ஆதிதிராவிடர் (முன்னாள் இராணுவத்தினர்) முன்னுரிமையற்றவர் |
| 11 | நிலமழகிய மங்கலம் | 1 | 63. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது) முன்னுரிமையற்றவர் |
| 12 | கடம்பனேந்தல் | 1 | 64. பிற்படுத்தப்பட்டோர் (முன்னாள் இராணுவத்தினர்) முன்னுரிமையற்றவர் |
| 13 | பாரூர் | 1 | 65. பொது (முன்னாள் இராணுவத்தினர்) முன்னுரிமையற்றவர் |
| 14 | கலியநகரி | 1 | 66. ஆதிதிராவிடர் (அருந்ததியனர்) (பெண்கள்) முன்னுரிமையற்றவர் |
| 15 | கொடிப்பங்கு | 1 | 67. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது) முன்னுரிமையற்றவர் |
| 16 | ஆழிகுடி | 1 | 68. பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) முன்னுரிமையற்றவர் |

www.Tamilanwork.com

2. நியமனத்தின் போது தெரிவு செய்யப்பட்ட தகுதியும், தகுதியான போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினைச் சார்ந்த பிற விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. நியமனத்தின் போது தெரிவு செய்யப்பட்ட தகுதியும், தகுதியும் வாய்ந்த முன்னாள் இராணுவத்தினர் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினைச் சார்ந்த பிற தகுதியுடைய விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் செய்யும் வருவாய் கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு வசிக்கும் முகவரியை கொண்டவராக இருக்க வேண்டும்.

**3. தகுதிகள் :**

அ) வயது (01-07-2020 அன்று வயது)

1) விண்ணப்பதாரர்கள் 21 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

2) விண்ணப்பதாரர்கள் 01.07.2020 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது

| | | |
|---|---|---|
| 1) | பொது பிரிவினர் (OC) | 30 வயது |
| 2) | இதர அனைத்து வகுப்பினர் | 35 வயது |
| 3) | மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும் | |

**ஆ) கல்வித்தகுதிகள் :**

விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**இ) இதர தகுதிகள் :**

1) விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுத படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

2) மிதி வண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

**4 தெரிவு முறை :**

மேற்படி காலிப்பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நல அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முக தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும் இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முக தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் வகுப்புவாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிட எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு கட்டாயம் முகக்கவசம் (MASK) அணிந்து வருகை புரிய வேண்டும். நேர்முக தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். நேர்முகத்தேர்வு சமூக இடைவெளி (Social Distance) பின்பற்றி நடைபெறும்

முழுவதுமாக பூர்த்தி செய்யப்படாத (அ) அனைத்து சான்றிதழ்களும் இணைக்கப்படாத (அ) நிர்ணயிக்கப்பட்ட வயதினைக் கடந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித அழைப்பாணையோ, இது குறித்த எவ்வித தகவலோ வழங்கப்பட்டமாட்டாது.

**5. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள் :**

விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயர் முழு முகவரி பிறந்த தேதி, மதம், இனம், கல்வித்தகுதி முன்னுரிமை கோருவதற்கான சான்றிதழ் உள்ளிட்ட விபரங்களை ஒரு வெள்ளைத் தாளில் தட்டச்சு செய்தோ அல்லது எழுத்தால் எழுதியோ மற்றும் பாஸ்போட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்படிவத்தில் ஒட்டியும் மற்றொரு புகைப்படத்தினை இணைத்தும் தகுதியான சான்றுகளின் நகலுடன் அனுப்ப வேண்டும். அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது

**6. நேர்முகத்தேர்வு**

நேர்முகத்தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முக தேர்வில் கலந்து கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளும் தேர்வர்கள், இவ்வலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்படும் அழைப்பாணையை கட்டாயம் நேர்முகத்தேர்வன்று கொண்டு வரவும்

**7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெறுதல் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அஞ்சல் வழி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வட்டாட்சியர், திருவாடானை - 623 407 என்ற முகவரிக்கு 27.7.2020 மாலை 05.45 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**வட்டாட்சியர்**
**திருவாடானை**

www.Tamilanwork.com